**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**C.C.No. 162 -2025**

| | | | | |
|---|---|---|---|---|
| Deposition of LW 5 | | Examined as : PW 5 | | |
| Name | : கல்யாணசுந்தரம் | Defence | : | |
| Father/Husband Name | : கோவிந்தசாமி | Court | : | |
| Village | : முடிதிருச்சம்பள்ளி | Taluk | : | |
| Calling | : | | | |
| Age | : 59/2026 | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day 13.03.2026.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரிஆஜர் இல்லை. (u/s 355 of BNSS petition filed and allowed)

**முதல் விசாரணை:-**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து டிரைவர் வேலை செய்து வருகிறேன். நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள சாட்சி கையொப்பங்களில் முதலாவது கையொப்பம் என்னுடையது தான். அந்த **கையொப்பம் மட்டும் அசாஆ 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேற்படி கையொப்பத்தை எங்கு எப்போது எதற்காக செய்தேன் என்று தற்போது நினைவில் இல்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக மாறியதால் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு பரிசீலனைக்கு பின்னர் அனுமதிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:-**

கடந்த 13.07.2021ம் தேதி காலை 06.00 மணிக்கு செம்பனார் கோவில் காவல் நிலைய குற்ற எண். 648/2021 என்ற வழக்கில் போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள் என்றாலும், அதில் சாட்சியாக நானும் சசீந்திரனும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றாலும், தற்போது பார்வை மகசரில் உள்ள கையொப்பத்தை எதற்காக செய்தேன் என்று நினைவில் இல்லை என கூறி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.**